# சப்தகன்னிகைகள் பூஜிக்கும் சுகந்தபுரம்!

வி.சி.நாராயணன்

**“அடியெடுத்து வைத்தால் அழகான ஒரு கோயில்”** எனும்படி, அடிக்கு அடி கோயில் என்று ஏராளமான சந்நிதிகளினால் **‘கோயில் நகரம்’** என்று பெரியோர் போற்றிப் புகழும் திருநகரம் **காஞ்சிபுரம்.** ஊரில் மட்டுமல்ல, அதனைச் சுற்றியும்தான் எத்தனை, எத்தனை அழகான கோயில்கள்! ஒவ்வொன்றும், ஒவ்வொரு தெய்வீகப் பொக்கிஷம்! கலைச்செல்வம்!! காலம், காலமாக ஏராளமான சிற்பிகளின் கைத்திறன், உழைப்பு. காகிதத்தைக் கத்தரிப்பது போல், கல்லில் செதுக்கியிருக்கிறார்களே! வேறெந்த நாட்டிலாவது கல்லும் கவிபாடும் இத்தகைய சிற்பச் செல்வங்களைக் காணமுடியுமா?

இத்தகைய காஞ்சி புண்ணிய மாவட்டத்தில் செங்கல்பட்டின் அருகே, பாலாற்றின் கிழக்குக்கரையில் விளங்குகிறது **‘சுகந்தபுரம்’** என்னும் திவ்ய க்ஷேத்திரம். தற்போது இவ்வூர் **‘மணப்பாக்கம்’** என்று அழைக்கப்படுகிறது (‘சுகந்தம்’ என்றால் ‘நல்ல வாசனை’ என்று பொருள்). ‘மணம்’ என்றாலும் ‘நல்ல வாசனை’ என்பதே பொருள். இங்குதான் சுமார் 400 ஆண்டுகளுக்கும் மேலான, பழைமைவாய்ந்த ஸ்ரீ பூமிதேவி, ஸ்ரீ நீளாதேவி சமேதராய் அபயவரத முத்திரைகளுடன் எழுந்தருளி, பக்தர்களை ரட்சித்து வரும் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமானின் திருக்கோயில் அமைந்துள்ளது.

## பெருமானின் சக்தி!

1940-ம் ஆண்டு, பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மணப்பாக்கம் வெள்ளத்தில் மூழ்கிவிடும் அபாய நிலை வினாடிக்கு, வினாடி அதிகரித்துக்கொண்டே வந்தது. இரவு முழுவதும் ஊர் மக்கள் உறங்கவில்லை. பீதியினால் உறைந்து கிடந்த மக்களுக்கு உறக்கம் எப்படி வரும்? அனைவரும் காலையில் விடிந்தவுடன் ஊரை விட்டுச் சென்றுவிட ஆயத்தமாகிக்கொண்டிருந்தனர். அவ்வூரில், பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தார் அந்தணப் பெரியவர் ஒருவர்! ஊர் மக்களுக்கு அவரிடம் நல்ல மரியாதை உண்டு.

ஊரைக் கூட்டி, அந்தப் பெரியவர் தைரியம் கூறினார். **“நம் ஆதிகேசவனைத் தனியே விட்டு விட்டு நாம் சென்றுவிடுவது நியாயமா? அல்லது அவன்தான் நம்மை இத்தருணத்தில் கைவிட்டுவிடுவானா?...”** என்று கூறி, அவர்களுக்குத் தைரியம் ஊட்டினார். அந்தத் தள்ளாத வயதிலும், அவரது பக்தியையும், மனஉறுதியையும் கண்ட மக்கள், “நடப்பது நடக்கட்டும்” என்று, கோயிலினுள் ஒன்றுகூடி, கேசவனின் திருநாமத்தையே சொல்லிக் கொண்டிருந்தனர்.

என்ன ஆச்சரியம்! அப்படியும் ஓர் அதிசயமா? சீறிப் பாய்ந்து கொண்டிருந்த வெள்ளம், மெல்ல மெல்ல வேகம் குறைந்து, வடிந்து கொண்டே வந்தது. மணப்பாக்கமும் தப்பித்துவிட்டது - வெள்ளத்தினின்று! ஸ்ரீ ஆதிகேசவனின் சக்தியை உணர்ந்த மக்கள் உணர்ச்சிவசப்பட்டனர். அன்று மாபெரும் கவுரவர் சபையில் திரௌபதியின் மானம் காத்த பெருமானுக்கு, இந்த ஆற்று வெள்ளம் ஒரு பொருட்டா? பெருமானை பக்தியுடன் போற்றி வணங்கினர். இது போல், வேண்டுவோர்க்கு வேண்டுவன அனைத்தையும் அளித்து, அருள்பாலித்து வரும் மிகப் புராதனமான ஸ்ரீ ஆதிகேசவப் பெருமானின் திருக்கோயிலை சப்த கன்னிகைகள் பூஜித்து வருவதாகத் தலவரலாறு கூறுகிறது.


## மகான்கள் திருவடிகள் பட்ட திருத்தலம்!

**‘ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமிகள்’** என்று பக்தர்களால் இன்றும் பூஜிக்கப்பட்டுவரும், **ஸ்ரீமத் ரங்க ராமானுஜ மகாதேசிகன்** என்னும் யதிசிரேஷ்டர் 1882-ம் ஆண்டு, மார்ச் மாதம் மணப்பாக்கத்தில்தான் அவதரித்தார். மேலும், உலகப் பிரசித்திப்பெற்ற வைணவ மடாதிபதிகளான, **திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள்** மற்றும் தற்போதைய **ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள், மேலும்** பல மகான்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து, தரிசித்துத் திருவுள்ளம் மகிழ்ந்துள்ளனர்.

## திருப்பணிகள்!

மிகப் பழைமையானதும் சக்திவாய்ந்ததுமான இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதற்காக ‘ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருப்பணிக்குழு’ அமைக்கப்பட்டுள்ளது. வசதியுள்ள அன்பர்களின் உதவி அவசியம் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் ஆறு லட்ச ரூபாய் வேண்டியிருக்கிறது.

**கஷ்டப்படாமல், அவரவர் சக்திக்கு உட்பட்டு** உதவும்படி வேண்டுகிறோம். பல தலைமுறைகளுக்கு இன்றே நாம் சேர்த்து வைக்கும் சொத்து, இப்புண்ணிய கைங்கர்யத்தின் பலன்! கிடைத்தற்கரிய இத்தகைய திருக்கோயில்களை எப்பாடுபட்டாவது நாம் காப்பாற்றியே ஆகவேண்டும்! உய்யும் வழி வேறில்லை நமக்கு! ஆதலால், உதவும்படி வேண்டுகிறோம்.



**ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமான்.**

**மேலும் விவரம் வேண்டுவோர் :**

**திரு. எம்.எஸ். ராஜகோபாலன்,**
**கௌரவப் பொருளாளர்,**
**ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கைங்கர்ய சபா,**
**137/60, லஸ் சர்ச் ரோடு,**
**மயிலாப்பூர்,**
**சென்னை-600 004.**
**தொலைபேசி :**
**91-44-24994503,**
**42109201**
**E-mail:info@aadhikesavaperumal.com** என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்.